259

# புத்தளம் கல்வி வலயத்தின் ஓவிய வளர்ச்சியும் முஹம்மத் அவர்களின் பங்களிப்பும்

பெயர் :- செவ்வி நஜானுல்லா நஸ்ஸுஹானா

சுட்டெண் :- CS 3155

பதிவிலக்கம் :- **EU/IS/2007/AC/155**

EASTERN
UNIVERSITY, SRI LANKA.
EXAMINATION BRANCH
09 JAN 2014
VANTHARUMOOLAI,
CHENKALADY.

FAC259
Project Report
Library - EUSL

நுண்கலைத்துறை
கலைக்கலாசாரபீடம்
கிழக்கு பல்கலைக்கழகம்
இலங்கை
2013

PROCESSED
Main Library, EUSL

## முன்னுரை

### 1.0 ஆய்வுத் தலைப்பு

"புத்தளம் கல்வி வலயத்தின் ஓவிய வளர்ச்சியும் முஹம்மத் அவர்களின் பங்களிப்பும்"

### 1.1 ஆய்வுக்கான காரணம்

ஆய்வின் தேவை கருதியும் இலக்கியத்திற்காகவும் இருவகையில் பிரித்து நோக்கப்படுகின்றது

- பிரதான காரணம்
- துணைக்காரணம்

### 1.1.1 பிரதான காரணம்

ஓவியம் மனித உணர்வுகளை வெளிப்படுத்தும் உயிர்த்துடிப்புள்ள ஒரு கலையாகும். அதில் ஓவியக் கலைக்கென தனிப்பாரம்பரியம் உண்டு. இந்த வகையில் இக்கலைக்கு ஆர்வம் கொண்டு பிறையும் ஆர்வமூட்டுபவராக புத்தளம் கல்வி வலயத்தைச் சேர்ந்த முஹம்மத் அவர்கள் விளங்குகின்றார்கள். இவரைப் பற்றிய தகவல்கள் வெளிவந்திருப்பினும் அவை முழுமையான தகவல்களாக வெளிவரவில்லை என்ற காரணத்தினால் "புத்தளம் கல்வி வலயத்தின் ஓவிய வளர்ச்சியும் முஹம்மத் அவர்களின் பங்களிப்பும்" எனும் தலைப்பில் இவ்வாய்வு அவசியம் என எண்ணுகிறேன்.

### 1.1.2 துணைக்காரணம்

- முஹம்மத் அவர்களின் ஓவியங்களும் மாணவர்களை ஆர்வமூட்டுவதில் அவரின் பங்களிப்பு எவ்வாறானதாக காணப்படுகின்றது என்பது பற்றிய விடயங்கள் நூல் உருவில் அமைய வேண்டும் என்பதற்காகவும்
- பல்கலைக்கழகத்தில் ஓர் ஆய்வினை மேற்கொள்ள வேண்டும் என்பதற்காகவும்.

### 1.2 ஆய்வுப் பிரச்சினை

இலங்கையில் தமிழ் ஓவிய மரபு, சிங்கள ஓவிய மரபு என இரு ஓவியப் பாரம்பரியங்கள் உள்ளன அதில் முஸ்லிம்களின் ஓவியப் பாரம்பரியம் பற்றி ஆய்வுகள் காணப்படவில்லை. ஆனால் தமிழ், சிங்கள பாரம்பரியங்களுக்கூடாக இவர்களின் ஓவியங்களை வெளிப்படுத்தினாலும் அவை பற்றிய தகவல்கள் குறைவாகவே காணப்படுகின்றன. எனவே இவ் ஆய்வை மேற்கொள்வதன் மூலம் ஓரளவேனும் இந்நோக்கை பூர்த்தி செய்ய முயற்சித்துள்ளேன். இதன் மூலம் சிறந்த ஆய்வாக அமைவதற்காக முஹம்மத் அவர்களை தெரிவு செய்துள்ளேன்.

முஹம்மத்தின் கலைப்படைப்பாக்கம், மாணவர்களை ஆர்வமூட்டும் விதம் போன்றவற்றுடன் அவரின் படைப்புகள் என்பவற்றை மதிப்பீடு செய்வதற்காக தகவல்களை பெற்று பிரச்சினைகளுக்கான தீர்வு முன்வைக்கப்பட்டுள்ளது.

## 1.3 ஆய்வின் முக்கியத்துவம்

- முஹம்மத் பற்றிய தகவல்கனை ஆவணப்படுத்துவதற்காக.
- ஓவியவளர்ச்சியில் முஹம்மத்தின் பங்களிப்பு எவ்வாறானது என்பதை நிரூபித்தல்.

## 1.4 ஆய்வு முறையியல்

சேகரிக்கும் தரவுகளிலும், அதன் நம்பகத்தன்மையிலும் தான் ஆய்வின் வெற்றி தங்கியிருக்கின்றது. சேகரிக்கும் தரவுகள் செம்மையானதாக இருக்கும் பொழுது ஆய்வின் முடிவுகள் உண்மையானதாகவும், நம்பகத்தன்மை கொண்டதாகவும் அமையும். எடுத்துக்கொண்ட தலைப்பின் நம்பகத்தன்மையினை பரிசீலனை செய்வதற்காக பேட்டி காணுதல், நேரடியாக கலந்துரையாடுதல். அதாவது கள ஆய்வு முறையியலாக அமைந்துள்ளது.

## 1.5 தரவு சேகரிக்கும் முறைகள்

ஆய்வினை சிறந்த முறையில் செய்து முடிப்பதற்கு முதலாம் நிலைத் தரவுகள், இரண்டாம் நிலைத் தரவுகள் என சேகரிக்கப்பட்டுள்ளது.

### 1.5.1 முதலாம் நிலைத் தரவுகள்

ஆய்வினை மேற்கொள்ளும் ஆய்வாளரின் களத்திற்கு நேரடியாக சென்று சேகரிக்கும் தரவுகளாகும். இத்தரவினை சேகரிப்பதற்கு பின்வரும் முறைகள் பயன்படுத்தப்பட்டுள்ளது.

#### 1.5.1.1 நேரடி அவதானமுறை

இங்கு ஆய்வாளர் ஆய்வுக்குறியவர் வசிக்கும் பிரதேசத்திற்கு சென்று உரையாடுதல் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

#### 1.5.1.2 நேரடி தனிப்பட்ட விசாரணை

முக்கியமான தகவல்கள் குறிப்பட்ட கலைஞர்களாகவும் ஆசிரியர்களாகவும் இருப்பவர்கள் மூலமாக தரவுகள் சேகரிக்கப்பட்டுள்ளன.

### 1.5.2 இரண்டாம் நிலைத் தரவுகள்

ஆய்வுடன் தொடர்புபட்ட ஏனைய மூலகங்களிடம் இருந்து பெறப்படும் தரவுகள் இரண்டாம் நிலைத் தரவுகள் எனப்படும். புத்தகங்கள், பத்திரிகைகள் மூலம் தரவுகள் பெறப்பட்டுள்ளன.

## 1.6 பகுப்பாய்வு

முதலாவது இயலானது புத்தளம் கல்வி வலயத்தின் ஓவிய வளர்ச்சி பற்றியதாகும்.

இரண்டாவது இயலானது முஹம்மத் அவர்களின் வாழ்கை பின்புலம் பற்றியதாகும்.

மூன்றாவது அத்தியாயத்தினுள் முஹம்மத் அவர்களின் ஓவியப்படைப்புகளும் அவற்றின் வெளிப்பாடுகள் பற்றி குறிப்பிடப்பட்டுள்ளது.

நான்காவது அத்தியாயத்தினுள் முஹம்மத் அவர்களின் படைப்புகளில் அவர் கையாண்டுள்ள உத்தி முறைகள், பாணிகள், படைப்புக்களுக்காக அவர் பயன்படுத்தியுள்ள மூலகங்கள், அதனை தெரிவு செய்தமைக்கான காரணங்கள் என்றவாறு அத்தியாயம் பிரிக்கப்பட்டு படைப்புகளின் வலிமை பற்றி கூறப்படுகின்றது.

ஐந்தாவது அத்தியாயத்தினுள் நவீன ஓவியத்தின் கருத்துக்கள் என்பது நிரூபிக்கப்படுமாறு இவ் அத்தியாயம் பிரிக்கப்பட்டுள்ளது.

இறுதியாக ஆய்வுக்கான முடிவுகைளும் தகவல் தந்துதவியோர்களது விபரங்களும் அமைகின்றது இதனால் ஆய்வாளனது நம்பகமானதாகவும், திடமானதாகவும் அமையும் என எண்ணுகிறேன். இவ்வாறாக அத்தியாயங்கள் பிரிக்கப்பட்டுள்ளது.

பொருளடக்கம்


நன்றியுரை

முன்னுரை

இயல் 01 1 - 7

1.0 புத்தளம் கல்வி வலயத்தின் ஓவிய வளர்ச்சி

இயல் 02 8 - 15

2.0 முஹம்மட் அவர்களின் வாழ்க்கை பின்புலம்

2.1 ஓவியத் துறை நுழைந்தமைக்கான காரணம்

2.2 கலைத்துறையில் இவர் மனதை பாதித்த அனுபவங்கள்

2.3 சிற்ப ஓவிய கலைஞர் சார்ந்த எண்ணங்கள்

2.4 கற்பித்தல் முறையில் இவரின் அனுபவங்கள்

இயல் 03 16 - 39

3.0 முஹம்மட் அவர்களின் ஓவியப்படைப்புக்கள்

3.1 தரைகாட்சி ஓவியங்கள் (Landscape )

3.2 பொருட் கூட்டங்கள்

3.3 பிரதிமை ஓவியங்கள்

3.4 குறியீட்டு பாணியிலான ஓவியங்கள்

3.5 அலங்கார பாணியிலான ஓவியங்கள்

இயல் 04 40 - 45

4.0 முஹம்மட் அவர்களின் படைப்புக்கள்

4.1 படைப்புக்கள் உருவாகும் விதம்

4.2 படைப்புக்களில் பயன்படுத்தும் ஊடகம் அல்லது வர்ணம்

4.3 பாணிகள் உத்தி முறைகள்

4.4 முஹம்மட் அவர்களை கவர்ந்த ஓவியங்கள்

4.5 மாணவர்களுடைய ஓவியத்துறைபற்றிய கருத்து

இயல் 05 46

5.0 நவீன ஓவியம் பற்றிய கருத்துக்கள்